| Roll No. | | | | | | | | | | | Serial No. of Q. C. A. B. |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|

ಒಟ್ಟು ಪ್ರಶ್ನೆಗಳ ಸಂಖ್ಯೆ : 63 ] [ ಒಟ್ಟು ಮುದ್ರಿತ ಪುಟಗಳ ಸಂಖ್ಯೆ : 24

Total No. of Questions : 63 ] [ Total No. of Printed Pages : 24

**ಸಂಕೇತ ಸಂಖ್ಯೆ : 10-T** **ವಿಷಯ : ಪ್ರಥಮ ಭಾಷೆ — ತಮಿಳು**

**Code No. : 10-T** **Subject : First Language — TAMIL**

ದಿನಾಂಕ : 02. 04. 2012 ] [ Date : 02. 04. 2012

ಸಮಯ : ಬೆಳಿಗ್ಗೆ 10-30 ರಿಂದ ಮಧ್ಯಾಹ್ನ 1-45 ರವರೆಗೆ ] [ Time : 10-30 A.M. to 1-45 P.M.

ಪರಮಾವಧಿ ಅಂಕಗಳು : 125 ] [ Max. Marks : 125

**FOR OFFICE USE ONLY**

| Q. No. | Marks | Q. No. | Marks | Q. No. | Marks | Q. No. | Marks | Q. No. | Marks |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1. | | 14. | | 27. | | 40. | | 53. | |
| 2. | | 15. | | 28. | | 41. | | 54. | |
| 3. | | 16. | | 29. | | 42. | | 55. | |
| 4. | | 17. | | 30. | | 43. | | 56. | |
| 5. | | 18. | | 31. | | 44. | | 57. | |
| 6. | | 19. | | 32. | | 45. | | 58. | |
| 7. | | 20. | | 33. | | 46. | | 59. | |
| 8. | | 21. | | 34. | | 47. | | 60. | |
| 9. | | 22. | | 35. | | 48. | | 61. | |
| 10. | | 23. | | 36. | | 49. | | 62. | |
| 11. | | 24. | | 37. | | 50. | | 63. | |
| 12. | | 25. | | 38. | | 51. | | × | |
| 13. | | 26. | | 39. | | 52. | | × | |

| | | | |
|---|---|---|---|
| | | ***Total Marks*** | |
| **Total Marks in words** | | **Grand Total** | |
| 1. ✓ | | | |
| 2. ✓ | | ✓ | ✓ |
| *Signature of Evaluators* | *Registration No.* | *Signature of the Deputy Chief* | *Signature of the Room Invigilator* |

[ Turn over

*மாணவர் கவனத்திற்கு :*

i) இது வினாத்தாளுடன் கூடிய விடைத்தாள்.

ii) ஒவ்வொரு வினாவுக்கும் விடையளிக்கத் தேவையான இடம் கொடுக்கப்பட்டுள்ளது. கொடுக்கப்பட்டுள்ள அளவின்படியே விடைகளை எழுதவும்.

iii) இந்த வினாத்தாள் 'பொருத்துக' பிரிவையும் சேர்த்து மொத்தம் 63 வினாக்களைக் கொண்டுள்ளது.

iv) மாணாக்கர்கள் விடைகளை பென்சிலால் எழுதக்கூடாது. பென்சிலால் எழுதிய விடைகள் மதிப்பிடப்படமாட்டாது.

v) மாணாக்கர்களுக்கு வினாத்தாளைப் படிப்பதற்கென 15 நிமிடங்கள் கூடுதலாக தரப்பட்டுள்ளது.

கீழ்வரும் ஒவ்வொரு வினாவிற்கும் / முழுமைபெறாத கூற்றுகளுக்கும் ( Incomplete statements ) நான்கு மாற்று விடைகள் தரப்பட்டுள்ளன. மிகச் சரியான விடை என்று நீங்கள் கருதுபவற்றை தேர்ந்தெடுத்து அதன் கீழ் உள்ள விடை பகுதியில் விடையை குறியீட்டுடன் முழுவதுமாக எழுதவும் : $15 \times 1 = 15$

1. மக்களின் உயிர் மூச்சாக விளங்குவது

(A) கிராமங்கள்

(B) இயற்கை

(C) செல்வம்

(D) பண்பாடு.

*விடை :* ______________________

2. ஐம்பெருங்காப்பியங்களுள் ஒன்று

(A) சூளாமணி

(B) மனோன்மணீயம்

(C) மணிமேகலை

(D) சிவகாமி சரிதம்.

*விடை :* ______________________

3. ஆயிரங்கண்ணோன்

(A) இந்திரன்

(B) ஆபுத்திரன்

(C) அறவணன்

(D) புத்தன்.

*விடை :* ______________________

4. 'நீயும் நானும் வேறிடத்திருக்க வேண்டும்'' என்று கூறியவன்

(A) சேதிமன்னன்

(B) முத்தநாதன்

(C) காவலன்

(D) தத்தன்.

*விடை :* ____________________

5. 'காஞ்சிபுரம் வாங்கினான்' - இத்தொடர்

(A) இடவாகு பெயர்

(B) காலவாகு பெயர்

(C) பொருளாகு பெயர்

(D) தொழிலாகு பெயர்.

*விடை :* ____________________

6. 'ஆழி' என்பதன் பொருள்

(A) வானம்

(B) நீர்

(C) காற்று

(D) கடல்.

*விடை :* ____________________

7. கிராமியப் பண்பின் பெட்டகங்களாக விளங்குபவை

(A) நூலகங்கள்

(B) நாட்டுப்புறக் கலைகள்

(C) கோயில்கள்

(D) விளை நிலங்கள்.

*விடை :* ____________________

8. குயில் மொழி

(A) உவமைத் தொகை

(B) வினைத் தொகை

(C) பண்புத் தொகை

(D) உம்மைத் தொகை.

*விடை :* ______________________

9. 'அரங்கா நின்பக்கம் இருக்க ஒரு நாளும் மறவேன் மறவேனே'' என்றவர்

(A) மதுர கவிராயர்

(B) சவ்வாதுப் புலவர்

(C) சீனிவாச கவி

(D) இராம கவிராயர்.

*விடை :* ______________________

10. வீர சைவத்திற்கு வித்திட்டவர்

(A) சோமசுந்தரர்

(B) பசவண்ணர்

(C) கவிநாயகர்

(D) மாஸ்தி.

*விடை :* ______________________

11. காயக் கண்டது

(A) காய்குலைச் செந்நெல்

(B) சந்தனம்

(C) சூரியகாந்தி

(D) வெண்தயிர்.

*விடை :* ______________________

12. நீ கொட்டி முழக்கினால்

(A) உலகமே செவிடு

(B) திசைகளும் தவிடு

(C) புழுதியின் பிரளயம்

(D) பூமியில் பூகம்பம்.

*விடை :* ____________

13. திருக்குறளை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தவர்

(A) எம். அரியல்

(B) ஆல்பர்ட் ஸ்வைட்டர்

(C) லியோ

(D) ஜி.யு. போப்.

*விடை :* ____________

14. 'நிழல்' என்பது 'நீழல்' என வரின் அது எவ்விகாரம் ?

(A) வலித்தல் விகாரம்

(B) நீட்டல் விகாரம்

(C) மெலித்தல் விகாரம்

(D) குறுக்கல் விகாரம்.

*விடை :* ____________

15. செப்பலோசை உடையது

(A) வெண்பா

(B) ஆசிரியப்பா

(C) கலிப்பா

(D) வஞ்சிப்பா.

*விடை :* ____________

கோடிட்ட இடங்களைத் தகுந்த விடைகளால் நிறைவு செய்க : 5 × 1 = 5

16. கம்பரை ஆதரித்த வள்ளல் .................... .

17. குழவி .................... இன்றி வாழ்தல் இனிது.

18. நரைமுடி தரித்து தீர்ப்பு வழங்கிய சோழன் .................... .

19. .................... மரங்கள் வீடுகட்ட ஏற்றவை.

20. ''பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும் பாரினில் .................... நடத்த வந்தோம்''.

21. பொருத்துக : 5 × 1 = 5

| | | | |
|---|---|---|---|
| (a) | காரைமுத்துப் புலவர் | i) | புறநானூறு |
| (b) | சுந்தரம் பிள்ளை | ii) | கண்ணதாசன் |
| (c) | சங்க இலக்கியம் | iii) | வினைத்தொகை |
| (d) | இடுக்கண் | iv) | மனோண்மணீயம் |
| (e) | மூடுபனி | v) | தமிழரசி குறவஞ்சி |
| | | vi) | துன்பம். |

*விடைகள் :*

a) ______________________________

b) ______________________________

c) ______________________________

d) ______________________________

e) ______________________________

பின்வரும் ஒவ்வொரு வினாவிற்கும் ***ஒரு*** வாக்கியத்தில் விடை தருக : 10 × 1 = 10

22. செல்ல மழை ஏன் பொழிய வேண்டும் ?

23. 'எங்கே வந்தீர்கள் கூட்டமாக ?' என்று கேட்ட செர்டகாபிற்கு பண்ணையாட்கள் கூறிய பதில் என்ன ?

24. மாந்தருக்குள் மனம் வளரா நாகரிகம் எதைப் போன்றது ?

25. பிள்ளையவர்களின் வருத்தத்திற்கு காரணம் என்ன ?

26. செவிக்கு இன்பம் தருவது எது ?

27. ஐம்பூதங்கள் யாவை ?

28. பெண்ணடிமை தீரும் வரை எது தீராது ?

29. இரட்டுற மொழிதல் என்றால் என்ன ?

30. ஆனந்தரங்க பிள்ளைக்கு எம்மொழிகளில் பயிற்சி உண்டு ?

31. திம்மக்கா மரங்களை எதைப்போல வளர்த்தார் ?

பின்வரும் ஒவ்வொரு வினாவிற்கும் ***மூன்று*** வாக்கியங்களில் விடை தருக : $15 \times 2 = 30$

32. பிரஞ்சு கவர்னர் 'துய்ப்ளே' ஆனந்தரங்கப் பிள்ளை குறித்துக் கூறியன யாவை ?

33. குணங்குடி மஸ்தான் இறைவனை நோக்கி இயம்புவது யாது ?

34. இளமைப் பருவத்தின் மகத்துவம் குறித்து கவிஞர் சிற்பி கூறுவன யாவை ?

35. சோழனின் போர் யானை நாணிப்புறங்கடை நின்றது ஏன் ?

36. பஞ்சம் ஏற்பட்ட பொழுது முசே லெனுவார் இட்ட உத்தரவு யாது ?

37. ஔவையார் எதனை நல்ல நிலமென்று கூறுகிறார் ?

38. மகாவித்வான் ஏழை மாணவர்களை எவ்வாறு படிப்பித்து அனுப்புவார் ?

39. சின்னப் பிள்ளைக்கு விருது வழங்குவது குறித்து காந்தியடிகளின் பேத்தி சுமித்ரா குல்கர்ணி கூறியது யாது ?

40. நாய் பெற்ற தெங்கம் பழம் எது ?

41. பிரஞ்சு நாட்டின் தலைசிறந்த எழுத்தாளர் எம். அரியல் திருக்குறளைப் பற்றிக் கூறுவது யாது ?

42. அமெரிக்கர்கள் காலத்தைப் பொன் போல் போற்றுவர் என்பதை எடுத்துக்காட்டுக.

43. மரபு என்றால் என்ன ? எடுத்துக்காட்டு தருக.

44. எண்ணியர் எண்ணியாங்கு எய்துவது எவ்வாறு ?

45. குடிலன் பேராசையால் செய்த சூழ்ச்சி யாது ?

46. 'பூவழகு' - இதில் இடம்பெற்றுள்ள உடம்படு மெய்யை எடுத்துக்காட்டுக.

*குறிப்பு :* பின்வரும் வினாக்களுக்கு இடம் சுட்டிப்பொருள் விளக்குக : 5 × 3 = 15

47. ''இது பொறுப்பதில்லை தம்பி எரிதழல் கொண்டு வா''

48. ''இந்தியாவிலிருந்து எனக்கு ஏது கொணர்ந்தாய் ?''

49. ''எல்லாம் தேவியின் திருவருள்''

50. ''ஐயோ, மரங்களை வெட்டுவதா ?''

51. ''நல்ல தீர்ப்பு கிடைக்கும் என்ற நம்பிக்கை எனக்கு இல்லை''

பின்வரும் ஒவ்வொரு வினாவிற்கும் ***ஐந்து*** அல்லது ***ஆறு*** வாக்கியங்களில் விடை தருக :

$5 \times 3 = 15$

52. தோல் பொம்மலாட்டத்தில் காணப்படும் சிறப்பான காட்சிகளை விவரி.

*அல்லது*

தீய வழியில் பொருளீட்டியவர் எவ்வாறு துன்புறுகின்றனர் ?

53. கூலித்தொழில் செய்யும் பெண்களுக்குச் சின்னப்பிள்ளை எவ்வாறு உதவி புரிந்தார் ?

*அல்லது*

மழையின் சிறப்புகளாக வள்ளுவர் கூறுவன யாவை ?

54. இரட்டைக்கிளவிக்கும், அடுக்குத்தொடருக்கும் உள்ள வேறுபாடுகளை எழுதுக.

*அல்லது*

பிறிது மொழிதல் அணி என்றால் என்ன ? சான்று தருக.

55. உயிரளபெடையின் இலக்கணம் யாது ? சான்று தருக.

*அல்லது*

வஞ்சப்புகழ்ச்சி அணியைச் சான்றுடன் விளக்குக.

56. கீழ்க்காணும் பழமொழிகளுள் ஒன்றை மட்டும் விளக்குக.

அ) சாணேற முழம் சறுக்கும்

ஆ) தவளை தன்வாயால் கெடும்

இ) காக்கைக்குத் தன்குஞ்சு பொன்குஞ்சு.

அடிபிறழாமல் எழுதுக : 1 × 4 = 4

57. ‘‘காதொளிரும் .......... வாழ்க’’

*அல்லது*

‘‘பெரிய விடமே .......... பழம்’’

பின்வரும் ஒவ்வொரு வினாவிற்கும் ***எட்டு*** வாக்கியங்களில் விடை தருக : 3 × 4 = 12

58. பாரத நாட்டின் பெருமைகளாக திரு.வி.க. கூறுவன யாவை ?

*அல்லது*

ஆபுத்திரன் பாத்திரம் பெற்ற நிகழ்ச்சியை விவரி.

59. 'பாகவதமேள' - இக்கூத்தினை விளக்கி எழுதுக.

*அல்லது*

திம்மக்காவின் தொண்டினை விவரி.

60. பூங்குன்றனுக்கும் இளநாகனுக்கும் இடையிலான வழக்கை கரிகாலன் எவ்வாறு தீர்த்து வைத்தான் ?

*அல்லது*

ஏவுகணைகள் எவ்வாறு விண்வெளிக்குச் செலுத்தப்படுகின்றன ?

61. பின்வரும் பகுதியைப் படித்து கேட்கப்பட்ட வினாக்களுக்கு விடை தருக : $4 \times 1 = 4$

மழை பெய்வதற்கு முக்கிய காரணிகளாக இருப்பன மரஞ்செடி கொடிகள். வான்வழி மிதந்து வரும் மேகக்கூட்டங்கள் குளிர்ச்சி அடைந்தால், அவை மழையாகப் பொழியும். அம்மேகக் கூட்டங்களைக் குளிர வைப்பன மரம் செடி கொடிகள் தாம். மக்கள் தொகைப் பெருக்கத்தால் மரம் செடி கொடிகள் இருந்த இடங்கள் பலவும் மக்கள் வாழும் இடங்களாக மாறி இயற்கை வளங்கள் அழிந்து விட்டன. மழையைப் பெய்விக்கும் இயற்கை வளங்களைப் பாதுகாப்பதன் மூலமும் வளங்களை உருவாக்குவதன் மூலமும் நீர் வளத்தைப் பெருக்கலாம்.

*வினாக்கள் :*

1. மழை பெய்வதற்கு முக்கிய காரணிகள் எவை ?
2. மேகக்கூட்டங்கள் எப்போது மழையாகப் பொழியும் ?
3. இயற்கை வளங்கள் எவ்வாறு அழிந்தன ?
4. நாம் எவ்வாறு நீர்வளத்தைப் பெருக்கலாம் ?

*விடைகள் :*

1.

2.

3.

4.

62. உன் பள்ளியில் நடந்த விளையாட்டு விழா நிகழ்ச்சியினை விளக்கி உன் நண்பனுக்கு மடல் ஒன்று வரைக. 5

*அல்லது*

நீ வாழும் பகுதியில் தெரு நாய்களின் தொல்லைகளை விளக்கி நகர சபை ஆணையருக்கு விண்ணப்பம் ஒன்று வரைக.

63. பின்வருவனவற்றுள் ஏதேனும் ஒன்று குறித்துக் கட்டுரை வரைக : 1 × 5 = 5

i) கைப்பேசியின் பயன்பாடு

ii) காடுகளை வளர்ப்போம்

iii) சமூக மேம்பாட்டில் மாணவர் பங்கு.